Working Partner = பணிபுரியும் பங்காளர்

Worked Shed = தொழிற் கொட்டில்

Worksman's breach of contract = வேலையாள் ஒப்பந்த முறிவு

Worksman's compensation = வேலையாள் இழப்பீடு

Workmanship = வேலைப்பாடு, வேலைத்திறன்

Works Committee = பணிக் குழு

Workship Attendants = பட்டறைப் பணியாட்கள்

Worldwide Wab (www) = உலகளாவிய தகவல் தளம்

Worshipful Mayor = வணக்கத்திற்குரிய மேயர்

Wound Pension = ஊனமடைந்தோர் ஓய்வுச் சம்பளம்

Wrapper = உறைத்தாள்

Writing Pad = எழுது அட்டை

Written test = எழுதும் தேர்வு

[X]

X- Ray = ஊடுகதிர், நுண்கதிர்

X - Ray Flim = நுண்கதிர்ப் படம்

X-Ray report = நுண்கதிர்ப்பட அறிக்கை

[Y]

Year book = ஆண்டுத் தகவல் வெளியீடு

Yearly digest = ஆண்டுச் செய்தித் தொகுப்பு

Yours faithfully = தங்கள் நம்பிக்கைக்குரிய, தங்கள் உண்மையுள்ள

Yours Sincerely = தங்கள் உண்மையுள்ள, தங்கள் உள்ளமார்ந்த

Yours Truly = தங்கள் உண்மையான

துறைசார்ந்தகலைச்சொற்கள்

தமிழ்நாடுஅரசாங்கம்

தலைமைச்செயலகத்துறைகளின்பெயர்கள்

Agriculture Department = வேளாண்மைத் துறை

Education Department = கல்வித் துறை

Health and Family Planning Department = உடல்நல மற்றும் குடும்பக் கட்டுப்பாட்டுத் துறை

Finance Department = நிதித்துறை

Food Department = உணவுத் துறை

Home Department = உள் துறை

Industries, Labour and Housing Department = தொழில், தொழிலாளர் மற்றும் வீட்டு வசதித் துறை

Law Department = சட்டத் துறை

Legislative Assembly = சட்டமன்றப் பேரவைத் துறை

Department Legislative council = சட்டமன்ற மேலவைத் துறை

Deparment Public (Civil Defence) = பொது (குடிமுறைப் பாதுகாப்புத்) துறை

Department Public (Elections) Department = பொது (தேர்தல்) துறை

Public (General-Miscellaneous) Department = பொது (பொது-பல்வகைத்) துறை

Social WelFare (Information and Publicity Department = சமுக நல (செய்தி விளம்பரத்) துறை

Public (Inspection-cell) Department = பொது (ஆய்வு-தனிப்பிரிவு) துறை

Public (Military) Department = பொது (படைத்) துறை

Public (Political) Department = பொது (அரசியல்) துறை

Pubilc (Services) Department = பொது (பணியாளர் தொகுதித்) துறை

Public (Special) Department = பொது (தனித்) துறை

Public (Tamil Development) Department = பொது (தமிழ் வளர்ச்சித்) துறை

public Works Department = பொதுப் பணித்துறை

Revenue Department = வருவாய்த் துறை

Rural Develompent and Local Administration Department = ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை

வேறுதுறைகளின் பெயர்கள்

Accommodation Conroller's Office = இடவசதிக்கட்டுப்பாடு அதிகாரி அலுவலகம்

Agricultural Income-tax Department = வேளாண்மை வருமான வரித்துறை

Animal Husbandry Department = கால் நடைப் பராமரிப்புத் துறை

Approved Schools and Vigilance Department = சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் கண்காணிப்புத்துறை

Archaeology Department = தொல்பொருளியல் துறை

Board of Revenue = வருவாய் வாரியம் –

(i) Land Revenue (i)நில வருவாய்

(ii) Settlement (Land) (ii) நிலவரித் திட்டம்

(iii) Survey and Land Records (iii)நில அளவை, நிலப் பதிவுருக்கள்

Commercial Taxes Department = வணிக வரித் துறை

Co-operative Department = கூட்டுறவுத் துறை

Directorate of Collegiate Education = கல்லூரிக் கல்வி இயக்ககம்

Directorate of School Education = பள்ளக் கல்வி இயக்ககம்

Directorate of Technical Education = தொழில் நுட்ப கல்வி இயக்கம்

Fisheries Department = மீன் துறை

Forest Department = வனத் துறை

Handloom Department = கைத்தறித் துறை

Harijan Welfare Department = ஆதி திராவிடர் நலத் துறை

Highways and Rural Works Department = நெடுஞ்சாலை, ஊரகப் பணித் துறை

Hindu Religious and Charitable Endowments (Administration) Department = இந்து சமய அறக்கட்டளை (ஆட்சித்) துறை

Industries and Commerce Department = தொழில் வணிகத் துறை

Jail Department = சிறைத் துறை

khadi Department = கதர்த் துறை

Labour Department = தொழிலாளர் துறை

Local Administration Department = உள்ளாட்சித் துறை

Local Fund Audit Department = உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

Dairy and Milk Project = பால் பண்ணைத் திட்டம்

Joint Director of Agriculture (Planning and Administration) = இணை வேளாண்மை இயக்குநர் (திட்டம் மற்றும் நிர்வாகம்)

State Seed Farm = அரசு விதைப்பண்ணை

Joint Director of Agriculture (Inspection and General) = இணை வேளாண்மை இயக்குநர் (ஆய்வு மற்றும் பொதுப்பிரிவு)

Joint Director of Agriculture (I.A.A. Programme) = இணை வேளாண்மை இயக்குநர் (செறிவு வேளாண்மைப் பகுதித் திட்டம்)

Deputy Director of Agriculture = துணை வேளாண்மை அலுவலர்

Regional Deputy Director = வட்டாரத் துணை இயக்குநர்

District Agricultural Officer = மாவட்ட வேளாண்மை அலுவலர்

State Compost Development Officer = மாநில மக்கு உர வளர்ச்சி அலுவலர்

Assistant Agricultural Engineer (S.C.S) = உதவி வேளாண்மைப் பொறியாளர் (மண்வளப் பாதுகாப்பு திட்டம்)

Assistant Agriculture Engineer (Inspection) = உதவி வேளாண்மைப் பொறியாளர் (ஆய்வு)

Assistant Agriculture Engineer (Tractor Worksshop) = உதவி வேளாண்மைப் பொறியாளர் (உழுவைப் பட்டறை)

State Sugarcane Development Officer = மாநிலக் கரும்பு வளர்ச்சி அலுவலர்

Cane Development Officer = கரும்பு வளர்ச்சி அலுவலர்

Sugarcane Specaialist = கரும்புச் சிறப்பாய்வாளர்

State Marketing Officer = மாநில விற்பனை அலுவலர்

Assistant Marketing Officer = உதவி விற்பனை அனுவலர்

Rice Research Station = நெற்பயிர் ஆராய்ச்சி நிலையம்

Agricultural Research Station = வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்

Assistant Direction (Drilling) = உதவி இயக்குநர் (துளையிடும் பிரிவு)

Assistant Oil Seeds Specialist = எண்ணெய் வித்து உதவிச் சிறப்பறிஞர்

Assistant Paddy Specialist = நெற்பயிர் ஆராய்ச்சி நிலையம்

Field Manure Officer = இயற்கை உர அலுவலர்

Assistant Cotton Specialist = உதவிப் பருத்திச் சிறப்பாளர்

Cotton Extension Officer = பருத்தி விரிவாக்க அலுவலர்

Oil Seeds Development Officer = எண்ணெய் வித்து வளர்ச்சி அனுவலர்

Banana Research Officer = வாழை ஆராய்ச்சி அலுவலர்

Cashewnut Development Officer = முந்திரிப் பெருக்கு அலுவலர், முந்திரி வளர்ச்சி அதிகாரி

Cocount Develoment Officer = தென்னை வளர்ச்சி அலுவலர்

Agricultural Engineer (Crash Programme) = வேளாண்மைப் பொறியாளர் (கடுவிரைவுத் திட்டம்)

Assistant Agricultural Engineer (Soil Conservation) (Maintenance) = உதவி வேளாண்மைப் பொறியாளர் (மண்வளப் பாதுகாப்பு). (பராமரிப்பு)

Assistant Agricultural Engineer (Soil Conservation) (Investigation) = உதவி வேளாண்மைப் பொறியாளர் (மண்வளப் பாதுகாப்பு), (ஆராய்வு)

Special District Agricultural Officer (cotton Package) = மாவட்ட வேளாண்மைத் தனி அலுவலர் (பருத்தித் தீவிரச் சாகுபடித் திட்டம்)

Special District Agricultural Officer (Vegetables) = மாவட்ட வேளாண்மைத் தனி அலுவலர் (காய்கறிஉற்பத்தி)

Special District Agricultural Officer (Tobacco Package) = மாவட்ட வேளாண்மைத் தனி அலுவலர் (புகையிலைத் தீவிரச் சாகுபடித் திட்டம்)

Special District Agricultural Officer (Potato) = மாவட்ட வேளாண்மைத் தனி அலுவலர் (உருளைக் கிழங்கு)

Special District Agricultural Officer (Groundnut Package) = மாவட்ட வேளாண்மைத் தனி அலுவலர் (நிலக்கடலைத் தீவிரச் சாகுபடித் திட்டம்)

Special District Agricultural Officer (BananaPackage) = மாவட்ட வேளாண்மைத் தனி அலுவலர் (வாழைப்பழத் தீவிரச் சாகுபடித் திட்டம்)

Special District Agricultural Officer (dry Farming) = மாவட்ட வேளாண்மைத் தனி அலுவலர் (புன்செய் வேளாண்மை)

Assistant Agricultural Engineer (Sand Dune Investigation Scheme) = உதவி வேளாண்மைப் பொறியாளர் (மணல்மேடு ஆராய்வுத் திட்டம்)

Principal, Agricultural College = முதல்வர், வேளாண்மைக் கல்லூரி

Assistant Nematologist = உதவி நூற்புழுவியல் ஆராய்ச்சியாளர்

Research Engineer = ஆராய்ச்சிப் பொறியாளர்

State Cotton Development Officer = மாநிலப் பருத்தி வளர்ச்சி அலுவலர்

Assistant Cotton Development Officer = உதவி பருத்தி வளர்ச்சி அலுவலர்

Tobacco Development Officer = புகையிலை வளர்ச்சி அலுவலர்

Assistant Agricultural Engineer (Reclamation of Waste Lands) = உதவி வேளாண்மைப் பொறியாளர் (தரிசு நிலச் சீர்த்திருத்தம்)

Special District Agricultural Officer (seed Multiplication) = மாவட்ட வேளாண்மைத் தனி அலுவலர் (விதைப் பெருக்கம்)

கால்நடைப் பராமரிப்புத் துறை

Superintendent, Livestock = கண்காணிப்பாளர், கால்நடை ஆராய்ச்சி

Research Station = நிலையும்

Superintendent, District = கண்காணிப்பாளர், மாவட்டக்

Livestock Farm = கால்நடைப் பண்ணை

Assistant Research Officer = உதவி ஆராய்ச்சி அலுவலர்

Hatchery Officer = பொரிப்புப் பொறி அலுவலர்

Feed Development Officer = தீவன வளர்ச்சி அலுவலர்

Superintendent, Poultry = கண்காணிப்பாளர், கோழியின

Research Station = ஆராச்சி நிலையம்

Officer, I/c., Central Semen Collection = அலுவலர், விந்து சேகரிப்பு மைய நிலையம்

Cattle Development Specialist = கால்நடை வளர்ச்சிச் சிறப்பாய்வாளர்

Special District Agriculture = மாவட்ட வளர்ச்சித் சிறப்பாய்வாளர்

Dairy Extension Officer = பாற்பத விரிவாக்க உதவியாளர்

Village Level Worker = கிராம நிலைப் பணியாளர்

Superintendent, Sheep Farm = கண்காணிப்பாளர், ஆட்டுப் பண்ணை

Supervisor, sheep and Wool = மேற்பாவையாளர், ஆடுகம்பள உற்பத்தி

Extension Centre = விரிவாக்க நிலையம்

Veterinary Assistant Surgeon = கால்நடை உதவி அறுவை மருத்துவர்

Veterinary Assistant Surgeon, Sheep = கால்நடை உதவி அறுவை மருத்துவர், ஆடு

Demonstration Unit = வளர்ப்புச் செய்முறை விளக்கப் பிரிவு

Rinderpest Officer = வெக்கை நோய் அலுவலர்

Grain Purchase Officer = தானியக் கொள்முதல் அலுவலர்

Poultry Marketing Officer = கோழியின் விற்பனை அலுவலர்

Project Poultry Officer = கோழியினத் திட்ட அலுவலர்

Principal Investigetor = முதன்மை ஆராய்ச்சியாளர்

Nutrition Officer, State = ஊட்டச் சத்து அலுவலர், மாநிலக்

Livestock Research Stattion = கால்நடை ஆராய்ச்சி நிலையம்

Research Officer (Bact) = ஆராய்ச்சி அலுவலர், (நுண்ணுயிர்)

Geneticist = மரபியலறிஞர்

Assistant Research Officer, Scheme on Calf Starter with Spacial Reference to economic Calf feeding = உதவி ஆராய்ச்சி அலுவலர் (கன்றுகள் தீவன ஆராய்ச்சி)

Superintendent Salvage of Dry = கண்காணிப்பாளர், பால் வற்றிய பசுக்கள்

Cows Farm = பராமரிப்புப் பண்ணை

Mixed Farming Officer = கலப்பு வேளாண்மை அலுவலர்

Pig Breeding Officer = பன்றி இனப்பெருக்கு அலுவலர்

Field officer for Meat Production = இறைச்சி உற்பத்திக் களப்பணி அலுவலர்

Project Operator = படக் கருவி இயக்குபவர்

Cine Operator = திரைப்படம் இயக்குபவர்

Publicity Assistant = விளம்பர உதவியாளர்

Agricultural Engineering Maistry = வேளாண்மை பொறியில் மேலாள்

Agricultural Engineering Supervisor = வேளாண்மைப் பொறியியல் மேற்பார்வையாளர்

Agricultural Farm Manager = வேளாண்மைப் பண்ணை மேலாள்

Extension officer (Agriculture) = வரிவாக்க அலுவலர் (வேளாண்மை)

Extension Officer (Animal Husbandry) = விரிவாக்க அலுவலர் (கால்நடைப் பராமரிப்பு)

Agriculture Upper Subordinate = வேளாண்மை மேல் சார்நிலைப் பணியாளர்

Laboratory Assistant = ஆய்வக உதவியாளர்

Laboratory Attender = ஆய்வக பணியாளர்

Rediographer = கதிர்ப்படம் எடுப்பவர்

Refrigerator Mechanic = குளிர்ப்பத் இயந்திரக் கம்மியர்

Master Flayer = தலைமைத் தோல் உரிப்பவர்

Stockman Compounder = கால்நடை மருந்து கலப்பவர், கால்நடை மருந்துகலவையர்

Boilerman = கொதிகலப் பணியாள்

சீர்திருத்தப்பள்ளிகள், விழிப்புப்பணி

(DEPARTMENT OF APPROVED SCHOOLS AND VIGILANCE SERVICE)

Chief Inspector of Approved Schools and Vigilance Service = சீர்திருத்தப் பள்ளிகள், விழிப்புப் பணித் தலைமை ஆய்வாளர்

Assistant Chief Inspector of Approved Schools = சீர்திருத்தப் பள்ளிகள் உதவித் தலைமை ஆய்வாளர்

Inspector of Vigilance Service = விழிப்புப் பணி ஆய்வாளர்

Superintendent = கண்காணிப்பாளர்

Medical Officer = மருத்துவ அலுவலர்

Honorary Medical Officer = மதிப்புறு மருத்துவ அலுவலர்

Psychologist = மனவியலறிஞர்

Supervisor = மேற்பார்வையாளர்

Junior Supervisor = இளநிலை மேற்பார்வையாளர்

Assistant Superintendent (Administration) = உதவிக் கண்காணிப்பாளர் (ஆட்சி)

Assistant Superintendent (Character Training) = உதவிக் கண்காணிப்பாளர் (நடத்தைப் பயிற்சி)

Personal Assistant = நேர்முக உதவியாளர்

Secondary Grade Teacher = முதுநிலை ஆசிரியர்

Higher Elementary Grade Teacher = இளநிலை ஆசிரியர்

Tamil Pandit = தமிழாசிரியர்

Hindi Instructor = இந்தி ஆசிரியர்

Spinning Instructor = நூற்பு ஆசிரியர்

Weaving Instructor = நெசவு ஆசிரியர்

Mat Weaving Instructor = பாய் நெசவு ஆசிரியர்

Tailoring Instructor = தையல் ஆசிரியர்

Carpentry Instructor = தச்சு ஆசிரியர்

Blacksmithy Instructor = கருமார்த் தொழில் ஆசிரியர்

Metal work Instructor = உலோகத் தொழில் ஆசிரியர்

Embroidery Mistress = பூத்தையல் ஆசிரியை

Music Mistress = இசை ஆசிரியை

Book Binding Instructor = புத்தகங் கட்டுதல் ஆசிரியர்

Workshop Assistant = பட்டறை உதவியாளர்

Master Cutter (Garments) = தலைமை வெட்டுநர் (உடைகள்)

Women's Welfare Officer = மகளிர் நல அலுவலர்

Physical Training Instructor = உடற்பயிற்சி ஆசிரியர்

Poultry Attendant = கோழிப் பண்ணைப் பணியாள்

Dairy Attendant = பால்பதப் பணியாள்

House Master = இல்லத்து ஆசிரியர்

Band Master = வாத்தியக்குழு ஆசிரியர்

Mason Instructor = கொத்துவேலை ஆசிரியர்

Drawing Master = ஓவிய ஆசிரியர்

Chief Guard = தலைமைக் காப்பாள்

Guard = காப்பாள்

Gateman = வாயிற் காவலர்

Remand Peon = காவல் சேவகர்

Escort Peon = வழித் துணைச் சேவகர்

Wireman = மின்கம்பியாள்

Watchman = காவற்காரர்

Bank Chairman = வங்கித் தலைவர்

Nurse-cum-Matron = செவிலிப் பணி மூதாய்

Chief Matron = தலைமை மூதாய்

Work Mistress = தொழில் ஆசிரியை

Senior Reception Home Assistant = முதுநிலை வரவேற்பு இல்ல உதவியாளர்

Junior Reception Home Assistant = இளநிலை வரவேற்பு இல்ல உதவியாளர்

Head Gardener = தலைமைத் தோட்டக்காரர்

Gardener = தோட்டக்காரர்

Sanitary Worker = துப்புரவுப் பணியாள்

Pharmacist = மருந்தாக்குநர்

Nursing Orderly = செவிலிப் பணியாள்

Warden = காய்பாளர்

Part-time Mechanic = பகுதி நேர இயந்திரக் கம்மியர்

Assistant Cutter (Garinents) = உதவி வெட்டுநர் (உடைகள்)

Gutter (Holdall) = வெட்டுநர் (உள்ளடக்கி)

Peon = சேவகர், பணியாள்

Woman Patroller = காவற் பெண்டிர்

Attendant = பணியாள்

Sewing Mistress = தையல் ஆசிரியை

Hindustani Munshi = இந்துஸ்தானி ஆசிரியர்

Washerman = சலவையாளர்

Woman Guard = பெண் காப்பாளர்

வருவாய்வாரியம்

(BOARD OF REVENUE)

நிலவருவாய் (LAND REVENUE)

Commissioner, Land Revenue and Food Production = நில வருவாய், உணவு உற்பத்தி ஆணையாளர்

Secretary (L.R.) = செயலாளர் (நில வருவாய்)

Additional Secretary (Loans) = கூட்டுச் செயலாளர் (கடன்கள்)

Additional Secretary (L.R.) = கூட்டுச் செயலாளர் (நில வருவாய்)

Assistant Secretary (L.R.) = உதவிச் செயலாளர் (நில வருவாய்)

Assistant Secretary (Irrigation) = உதவிச் செயலாளர் (பாசனம்)

Assistant Secretary (Land Acquisition) = உதவிச் செயலாளர் (நில எடுப்பு)

Assistant Secretary (Loans) = உதவிச் செயலாளர் (கடன்கள்)

Assistant Secretary (Assignment) = உதவிச் செயலாளர் (நில ஒப்படைவு)

State Road Transport Officer = அரசு சாலைப் போக்குவரத்து அலுவலர்

First Assistant = முதல் உதவியாளர்

Collector, Collector - Additional = மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர்

District Magistrate = கூடுதல் மாவட்ட நடுவர்

District Revenue Officer = மாவட்ட வருவாய் அலுவலர்

Sub-Collector, I Class Magistrate = சார் மாவட்ட ஆட்சியர், முதல் வகுப்பு நடுவர்

Assistant Collector = உதவி மாவட்ட ஆட்சியாளர்

Personal Assistant to Collector = மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்

Revelue Divisional Officer = வருவாய்க் கோட்ட அலுவலர்

I Class Magistrate = முதல் வகுப்பு நடுவர்

Deputy Collector, I Class Magistrate = துணை மாவட்ட ஆட்சியர், முதல் வகுப்பு', - நடுவர்

Tahsildar = வட்டாட்சியர்

Headquarters Tahsildar = தலைமையிட வட்டாட்சியர்

Headquarters Deputy Tahsildar = தலைமையிடத் துணை வட்டாட்சியர்

Estate Manager = உடைமை மேலாளர்

Taluk Head Accountant = வட்டத் தலைமைக் கணக்கர்

Revenue Inspector = வருவாய் ஆய்வாளர்

District Welfare Officer = மாவட்ட நல அலுவலர்

Block Development Officer = வட்டார வளர்ச்சி அலுவலர்

Extension Officer for Agriculture = வேளாண்மை விரிவாக்க அலுவலர்

Extension Officer for Panchayats = ஊராட்சிகள் விரிவாக்க அலுவலர்

Extension Officer for Animal Husbandry = கால்நடைப் பராமரிப்பு விரிவாக்க அலுவலர்

Extension Officer for Khadi = கதர் விரிவாக்க அலுவலர்

Extension Officer for Industries = தொழில் விரிவாக்க அலுவலர்

Extension officer for Statistics = புள்ளியியல் விரிவாக்க அலுவலர்

Extension Officer for Co-operation = கூட்டுறவு விரிவாக்க அலுவலர்

Social Education Organiser(W) = சமூகக் கல்வி அமைப்பாளர் (பெண்)

Social Education Organiser(M) = சமூகக்கல்விஅமைப்பாளர் (ஆண்)

Union Engineer = ஒன்றியப் பொறியாளர்

Compost Development Inspector = மக்குளருப் பெருக்கு ஆய்வாளர்

District Surveyer = மாவட்ட அளவையர்

Minor Irrigation Supervisor = சிறு பாசன மேற்பார்வையாளர்

Special Deputy Collector (Land Acquisition) = தனித் துணை மாவட்ட ஆட்சியர் (நில எடுப்பு)

Special Deputy Collector (Inams) = தனித்துணை மாவட்ட ஆட்சியர் (இனாம்கள்)

Special Tahsildar (Loans) = தனி வட்டாட்சியர் (கடன்கள்)

Special Deputy Talisildar (Loans) = தனித் துணை வட்டாட்சியர் (கடன்கள்)

Special Deputy Tahsildar (Azmoish) = தனித் துணை வட்டாட்சியர் (பயிர்ப் பார்வை)

Special Deputy Tahsildar (Assignment) = தனித்துணைவட்டாட்சியர் (ஒப்படை)

Special Deputy Tahsildar (New Well Subsidy Scheme) = தனித்துணை வட்டாட்சியர் (புதுக்கிணறு உதவித் திட்டம்)

Special Deputy Collector (Food Production) = தனித் துணை மாவட்ட ஆட்சியர் (உணவு உற்பத்தி)

Secretary (Food Production) = செயலாளர் (உணவு உற்பத்தி)

Assistant Secretary (Food Production) = உதவிச் செயலாளர் (உணவு உற்பத்தி)

Senior Accounts Officer (Food Production) = முதுநிலைக் கணக்கு அலுவலர் (உணவு உற்பத்தி) .

Additional Assistant Secretary (Food Production) = கூட்டு உதவிச் செயலாளர் (உணவு உற்பத்தி)

நிலவரித்திட்டம்

(SETTLEMENT)

Settlement Commissioner = நிலவரித் திட்ட ஆணையர்

Director of Settlements = நிலவரித் திட்ட இயக்குநர்

Personal Assistant to the Director of Settlements = நிலவரித் திட்ட இயக்குநரின் நேர்முக உதவியாளர்

Additional Personal Assistant to the Director of Settlements = நிலவரித் திட்ட இயக்குநரின் கூட்டு நேர்முக உதவியாளர்

Settlement Officer = நிலவரித் திட்ட அலுவலர்

Assistant Settlement Officer = நிலவரித் திட்ட உதவி அலுவலர்

Settlement Tahsildar = நிலவரித் திட்ட வட்டாட்சியர்

Final Settiement Enquiry Tahsildar = நிலவரித் திட்ட இறுதி விசாரணை வட்டாட்சியர்

Settlement Deputy Tahsildar = நிலவரித் திட்டத் துணை வட்டாட்சியர்

Settlement Inspector = நிலவரித் திட்ட ஆய்வாளர்

நிலஅளவை, நிலப்பதிவுருக்கள்

(SURVEY AND LAND RECORDS)

Deputy Director of Survey and Land Records = நிலஅளவை, நிலப் பதிவுருக்கள் துணை இயக்குநர்

Assistant Director of Survey and Land Records = நில அளவை, நிலப் பதிவுருக்கள் உதவி இயக்குநர்

Photographic and Printing Expert = நிழற்பட அச்சுத்தொழில் வல்லுநர்

Manager (Teehnical) = மேலாளர் (தொழில்நுட்பம்)

Head Draftsman = தலைமை வரைவாளர்

Head Computor = தலைமைக் கணியர்

Senior Computer Draftsman = முதுநிலைக் கணிப்பு வரைவாளர்

Senior Computor = முதுநிலைக் கணியர்

Junior Computor Draftsman = இளநிலைக் கணிப்பு வரைவாளர்

Junior Computor = இளநிலைக் கணியர்

Head Compositor = தலைமை அச்சுக்கோப்பாளர்

Senior Compositor = முதுநிலை அச்சுக்கோப்பாளர்

Junior Compositor = இளநிலை அச்சுக்கோப்பாளர்

Assistant Manager = உதவி மேலாளர்

Technical Assistant = தொழில் நுட்ப உதவியாளர்

Reproduction Assistant = படி எடுப்பு உதவியாளர்

Map Mounter = நிலப்படம் ஒட்டுபவர்

Mechanic = இயந்திரக் கம்மியர், இயந்திரப் பழுது பார்ப்பவர்

Assistant Mechanic = உதவி இயந்திரப் பழுதுபார்ப்பவர்

Inspector of Survey and Land Records = நில அளவை, நிலப்பதிவுருக்கள் ஆய்வாளர்

District Surveyor = மாவட்ட நில அளவையர்

Deputy Surveyor = துணை நில அளவையர்

Taluk Surveyor = வட்ட நில அளவையர்

Town Surveyor = நகர நில அளவையர்

Panchayat Surveyor = ஊராட்சி நில அளவையர்

Field Surveyor = புல அளவையர்

குடிமைப் பொருள் வழங்கல்

(CIVIL SUPPLIES)

Commissioner, Civil Supplies = குடிமைப்பொருள் வழங்கல் ஆணையர்

Joint Commissioner, Civil Supplies (Procurement) = குடிமைப்பொருள் வழங்கல் இணை ஆணையர் (கொள்முதல்)

Joint Commissioner, Civil Supplies (Distribution) = குடிமைப்பொருள் வழங்கல் இணை ஆணையர் (பகிர்மானம்)

Secretary to the Commissioner of Civil Supplies = குடிமைப்பொருள் வழங்கல் ஆணையரின் செயலாளர்

Assistant Secretary to the Commissioner of Civil Supplies = குடிமைப்பொருள் வழங்கல் ஆணையரின் உதவிச் செயலாளர்

Deputy Commissioner of Civil Supplies (Rationing) = குடிமைப்பொருள் வழங்கல் துணை ஆணையர் (பங்கீடு)

Deputy Commissioner of Civil Supplies (Transport) = குடிமைப்பொருள் வழங்கல் துணை ஆணையர் (போக்குவரத்து)

Special Deputy Collector (Movement) = தனித்துணை மாவட்ட ஆட்சியர் (அனுப்புப் பணி)

Personal Assistant to the Deputy = குடிமைப்பொருள் வழங்கல் துணை

Commissioner of Civil Supplies (Rationing) = ஆணையரின் நேர்முக உதவியாளர் (பங்கீடு)

Regional Storage Officer = வட்டாரச் சேமிப்பு அலுவலர்

Regional Officer = பங்கீட்டு அலுவலர்

District Supply Officer = மாவட்ட வழங்கல் அலுவலர்

Taluk Supply Officer = வட்ட வழங்கல் அலுவலர்

City Storage Officer = மாநகரச் சேமிப்பு அலுவலர்

Godown Superintendent = கிடங்குக் கண்காணிப்பாளர்

Godown Keeper = கிடங்குக் காப்பாளர்

Godown Clerk = கிடங்கு எழுத்தர்

Enquiry Officer = விசாரணை அலுவலர்

Special Revenue Inspector (Civil Supplies) = தனி வருவாய் ஆய்வாளர் (குடிமைப் பொருள்)

Personal Assistant to the District Officer = மாவட்ட அலுவலரின் நேர்முக உதவியாளர்

Chief Controller of Accounts = கணக்குக் கட்டுப்பாட்டுத் தலைவர்

Deputy Chief Controller of Accounts = கணக்குக் கட்டுப்பாட்டுத் துணைத் தலைவர்

Statistical Officer = புள்ளி விவர அலுவலர்

Statistical Inspector = புள்ளி விவர ஆய்வாளர்

Special Tahsildar (Procurement) = தனி வட்டாட்சியர் (கொள்முதல்)

Special Tahsildar (Movement) = தனி வட்டாட்சியர் (அனுப்புப் பணி)

வணிக வரித்துறை

(COMMERCIAL TAXES DEPARTMENT)

Commissioner (Comimercial Taxes) Secretary = ஆணையர் (வணிக வரி) செயலாளர்

Assistant Secretary = உதவிச் செயலாளர்

Deputy Commissioner = துணை ஆணையர்

Deputy Commissioner (Intelligence) = துணை ஆணையர் (புலனாய்வு)

Chartered Accountant = பட்டயக் கணக்கர்

Special Government Pleader = அரசுச் சிறப்பு வழக்கறிஞர்

Chairmann, Sales Tax Appellate Tribunal = தலைவர், விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்

Member, Sales Tax Appellate Tribunal = உறுப்பினர், விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்

State Representative = அரசுச் சார்பாளர்

Deputy State Representative = அரசுத் துணைச் சார்பாளர்

Additional State Representative = அரசுக் கூட்டுச் சார்பாளர்

Assistant State Representative = அரசு உதவிச் சார்பாளர்

Commercial Tax Officer = வணிக வரி அலுவலர்

Commercial Tax Officer (Intelligence) = வணிக வரி அலுவலர் (புலனாய்வு)

Commercial Tax Officer (Central Intelligence Wing) = வணிக வரி அலுவலர் (மையப் புலனாய்வு பிரிவு)

Joint Commercial Tax Officer = வணிக வரி இணை அலுவலர்

Joint Commercial Tax Officer (Intelligence) = வணிக வரி இணை அலுவலர் (புலனாய்வு)

Commercial Tax Officer (Central Intelligence Wing) = வணிக வரி அலுவலர் (மையப் புலனாய்வு பிரிவு)

Joint Commercial Tax Officer (Audit) = வணிகவரி இணை அலுவலர் (தணிக்கை)

Joint Commercial Tax Officer (Check Post) = வணிகவரி இணை அலுவலர் (சோதனைச் சாவடி)

Deputy Commercial Tax Officer = வணிக வரித் துணை அலுவலர்

Deputy Commercial Tax Officer (Central Intelligence Wing) = வணிக வரி துணை அலுவலர் (மையப் புலனாய்வுப் பிரிவு)

Special Deputy Commercial Tax Officer (Detections) = வணிக வரித் துணை அனுவலர்(துப்பறிதல்)

Deputy Commercial Tax Officer (Check Post) = வணிக வரித்துணை அலுவலர் (சோதனைச் சாவடி)

Assistant Commercial Tax Officer = வணிக வரி உதவி அலுவலர்

Special Assistant Commercial Tax Officer = வணிக வரித் தனி உதவி அலுவலர்

Assistant Commercial Tax Officer (Central Intelligence Wing) = வணிக வரி உதவி அலுவலர் (மையப் புலனாய்வுப் பிரிவு)

Assistant Commercial Tax Officer (Sales Tax Collections) = வணிக வரி உதவி அலுவலர் (விற்பனை வரித் தண்டல்)

Upper Division Inspector of Sales Tax Collections = விற்பனை வரித் தண்டல் மேற்பிரிவு ஆய்வாளர்

கூட்டுறவுத்துறை

(CO-OPERATIVE DEPARTMENT)

Registrar of Co-operative Societies = கூட்டுறவுச் சங்கப் பதிவாளர்

Joint Registrar of Co-operative Societies = கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளர்

Joint Registrar of Co-operative Societies (Intensive agricultural Area Programme) = கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளர் (செறிவு வேளாண்மைப் பகுதித் திட்டம்)

Joint Registrar of Co-operative Societies (Consumers Cooperation) = கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளர் (நுகர்வோர் கூட்டுறவு)

Deputy Registrar of Co-operative Societies (Consumers Co-operation) = கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர்(நுகர்வோர் கூட்டுறவு)

Deputy Chief Audit Officer = துணைத் தலைமைத் தணிக்கை அனுவலர்

Deputy Registrar (Intensive Agricultural Area Programme) = கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர் (செறிவு வேளாண்மைப் பகுதித் திட்டம்)

Regional Joint Registrars of Co-operative = வட்டாரக் கூட்டுறவு சங்க இணைப் பதிவாளர்கள்

Statistical Assistant = புள்ளியியல் உதவியாளர்

Draughtsman = வரைவாளர்

Computor = கணியர்

Chief Co-operative Audit Officer = தலைமைக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர்

Deputy Registrar of Co-operative Societies = கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர்

District Co-operative Audit Officer = மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலர்

Deputy Registrar (Land Mortgage Banks) = துணைப் பதிவாளர் (நில அடைமான வங்கிகள்)

Special Deputy Registrar (Farming) = தனித் துணைப் பதிவாளர் (வேளாண்மைப் பண்ணை)

Personal Assistant to the Registrar = கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் நேர்முக உதவியாளர்

Deputy Registrar Principal = துணைப் பதிவாளர் முதல்வர்

Deputy Registrar Lecturer = துணைப் பதிவாளர் விரிவுரையாளர்

Co-operative Sub-Registrar = கூட்டுறவுச் சார் பதிவாளர்

Co-operative Sub-Registrar = கூட்டுறவுச் சார் பதிவாளர்

Lecturer = விரிவுரையாளர்

Senior Inspector of Co-operative Societies = கூட்டுறவுச்சங்க முதுநிலை ஆய்வாளர்

Senior Inspector Lecturer = முதுநிலை ஆய்வாளர் விரிவுரையாளர்

Sales Officer = விற்பனை அலுவலர்

Liquidation Inspector = கலைப்புச் சங்க ஆய்வாளர்

Junior Inspector of Co-operative Societies = கூட்டுறவுச் சங்க இளநிலை ஆய்வாளர்

Administrative Inspector = ஆட்சி ஆய்வாளர்

Territorial Inspector = நாட்டுப் பகுதி ஆய்வாளர்

Assistant Dairy Officer = பாற்பத உதவி அலுவலர்

Dairy Assistant = பாற்பத உதவியாளர்

Assistant Engineer (Godowns) = உதவிப் பொறியாளர் (கிடங்குகள்)

Supervisor (Public Works Department) = மேற்பார்வையாளர் (பொதுப்பணித்துறை)

Statistician = புள்ளிவிவரத் தொகுப்பாளர்

கல்வித்துறை

(EDUCATION DEPARTMENT)

Director of Public Instruction = கல்வி இயக்குநர்

Director of Collegiate Education = கல்லூரிக் கல்விஇயக்குநர்

Deputy Director of Collegiate Education = கல்லூரிக் கல்வித் துணை இயக்குநர்

Personal Assistant to the Director of Collegiate Education = கல்லூரிக் கல்வி இயக்குநரின் நேர்முக உதவியாளர்

Deputy Director of Public Instruction (Personnel) = கல்வித் துணை இயக்குநர் (பணியாளர்)

Deputy Director of Public Instruction (Elementary Education) = கல்வித் துணை இயக்குநர் (தொடக்கக் கல்வி)

Deputy Director of Public Instruction (Finance) = கல்வித் துணை இயக்குநர் (நிதி)

Deputy Director of Public Instruction (Instruction) = கல்வித் துணை இயக்குநர் (பயிற்சி)

Commissioner for Government Examinations = அரசுத் தேர்வு ஆணையர்

Deputy Commissioner for Government (Examinations) = அரசுத் தேர்வு துணை ஆணையர் (தேர்வுகள்)

Secretary to the Commissioner for Government Examinations = அரசுத் தேர்வு ஆணையரின் செயலாளர்

Special Officer (English) = தனி அலுவலர் (ஆங்கிலம்)

Special Officer for Scholarships = படிப்பு உதவித் தொகைத் தனி அலுவலர்

Special Officer for Libraries and Audit Education = நூலகம், முதியோர் கல்வித் தனி அலுவலர்

Special Officer for Text-Books = பாடப் புத்தகத் தனி அலுவலர்

Special Officer for Audio - visual Education = ஒளி, ஒலிக் கல்வித் தனி அலுவலர்

Technical Education Officer = தொழில் நுட்பக் கல்வி அலுவலர்

Inspector of Anglo - Indian Schools = ஆங்கில இந்தியப் பள்ளி ஆய்வாளர்

Chief Inspector of Physical Education = உடற்பயிற்சிக் கல்வித் தலைமை ஆய்வாளர்

Women Specialist in Physical Education = பெண்கள் உடற்பயிற்சிக் கல்விச் சிறப்பறிஞர்

Curator Government Oriental = காப்பாட்சியாளர், அரசாங்க கீழ்நாட்டு

Manuscripts, Library = மொழிகள், கையெழுத்துச் சுவடி

Divisional Inspector of Schools = நூலகம்

District Educational Officer = கோட்டப் பள்ளி ஆய்வாளர்

Inspectress of Girl's Schools = மாவட்டக் கல்வி அலுவலர்

Deputy Inspector of Schools = மகளிர்ப் பள்ளி ஆய்வாளர்

Inspector of Primary and Middle Schools = பள்ளித் துணை ஆய்வாளர் தொடக்க இடைநிலைப் பள்ளி ஆய்வாளர்

Junior Deputy Inspector of Schools = பள்ளி இளநிலைத் துணை ஆய்வாளர்

Regional Inspector of Physical Education = உடற்பயிற்சிக் கல்வி வட்டார ஆய்வாளர் முதல்வர், மாநிலக் கல்லூரி

Principal, Presidency College = முதல்வர், அரசுக் கலைக் கல்லூரி

Principal, Government Teacher Training College = முதல்வர், அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

Principal, Government Post Graduate Basic Training College = முதல்வர், அரசு ஆதாரப் பயிற்சிப் பட்டமேற் கல்விக் கல்லூரி

Chief Professor = தலைமைப் பேராசிரியர்

Professor = பேராசிரியர்

Assistant Lecturer = உதவி விரிவுரையாளர்

Physical Director = உடற்பயிற்சி இயக்குநர்

Physical Education Director = உடற்கல்வி இயக்குநர்

Headmaster = தலைமை ஆசிரியர்

Headmistress = தலைமை ஆசிரியை

School Assistant = பள்ளி உதவியாசிரியர்

Tutor = உதவி ஆசிரியர்

Director of School Education = பள்ளிக் கல்வி இயக்குநர்

Director of Public Library = பொது நூலக இயக்குநர்

Joint Director of School Education (finance) = பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (நிதி)

Joint Director of School Education (Personnel) = பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர்கள்)

Deputy Director of School Education = பள்ளிக் கல்வித் துணை இயக்குநர்

Deputy Director of School Education (Planning) = பள்ளிக் கல்வித் துணை இயக்குநர் (திட்டம்)

Director, State Institute of Education = தமிழ்நாடு கல்வி நிறுவன இயக்குநர்

Reader, State Instituteof Education = உதவிப் பேராசிரியர், தமிழ்நாடு கல்வி நிறுவனம்

Personal Assistant to the Director of Secondary Education = பள்ளிக் கல்வி இயக்குநரின் நேர்முக உதவியாளர்

Senior Accounts Officer = முதுநிலைக் கணக்கு அலுவலர்

Special Officer for Schools Meals Programme = பள்ளி உணவுத் திட்டத் தனி அலுவலர்

Field Officer for Schools' Meals Programme = பள்ளி உணவுத் திட்டக் களப்பணி அலுவலர்

Librarian = நூலகர்

Connemara Public Library = கன்னிமரா பொது நூலகம்

தொழில்நுட்பக் கல்வித் துறை

(DEPARTMENT OF TECHNICAL EDUCATION)

Director of Technical Education = தொழில் நுட்பக் கல்வி இயக்குநர்

Chairman, Board of Examination = தலைவர், தேர்வுக் கழகம்

Deputy Director of Technical = தொழில் நுட்பக் கல்வித் துணை இயக்குநர்

Assistant Director of Technical Education (Administration) = தொழில் நுட்பக் கல்வி உதவி இயக்குநர் (நிர்வாகம்)

Assistant Director of Technical Education (Stores Purchase) = தொழில் நுட்பக் கல்வி உதவி இயக்குநர் (பண்டங் கொள்முதல்)

Assistant Director of Technical Education (Polytechnics) = தொழில் நுட்பக் கல்வி உதவி இயக்குநர் (பல்துறைத் தொழில் பயிற்சிப் பள்ளிகள்)

Assistant Director of Technical Education (Examinations) = தொழில் நுட்பக் கல்வி உதவி இயக்குநர் (தேர்வு)

Secretary, Board of Examinations = செயலாளர், தேர்வுக் கழகம்

Technical Assistant (Electrical) = தொழில் நுட்ப உதவியாளர் (மின் இயல்)

Technical Assistant (Mechanical) = தொழில் நுட்ப உதவியாளர் (இயந்திர இயல்)

Technical Assistant (Civil) = தொழில் நுட்ப உதவியாளர் (கட்டிட இயல்)

Principal, Collegeof Engineering = முதல்வர், பொறி இயல் கல்லூரி

Principal, Government College of Technology = முதல்வர், அரசுத் தொழில் நுட்பக்கல்லூரி

Principal, Central Polytechnic = முதல்வர், மையப் பல்துறைத் தொழில் பயிற்சிக் கல்லூரி

Principal, Government Polytechnic = முதல்வர், அரசுப் பல்துறைத் தொழில் பயிற்சிக் கல்லூரி

Principal, Government Polytechnic for Women = முதல்வர், அரசு மகளிர் பல்துறைத் தொழில் பயிற்சிக் கல்லூரி

Principal, Institute of Film Technology = முதல்வர், திரைப்படத் தொழில் நுட்ப பயிலகம்

Principal, Institute of Leather Technology = முதல்வர், தோல் தொழில் நுட்பப் பயிலகம்

Principal, Regional School of Printing = முதல்வர், வட்டார அச்சுக் கல்விப் பள்ளி

Principal, Institute of Textile Technology = முதல்வர், நெசவுத் தொழில் நுட்பப் பயிலகம்

Special Officer, Institute of Chemical Technology = தனி அலுவலர், வேதியல் தொழில் நுட்பப் பயிலகம்

Special Officer, Institute of Commercial Practice = தனி அலுவலர், வணிகவியல் பயிலகம்

Personal Assistant to the Principal = முதல்வரின் நேர்முக உதவியாளர்

Junior Technical School = இளநிலைத் தொழில்நுட்பப் பள்ளி

Professor = பேராசிரியர்

Associate Professor = இணைப் பேராசிரியர்

Lecturer = விரிவுரையாளர்

Associate Lecturer = இணை விரிவுரையாளர்

Assistant lecturer or Senior Instructor = உதவி விரிவுரையாளர் அல்லது முதுநிலை ஆசிரியர்

Junior Instructor = இளநிலை விரிவுரையாளர்

Head of Department (Civil) = துறைத் தலைவர் (கட்டிட இயல்)

Head of Department (Mechanical) = துறைத் தலைவர் (இயந்திர இயல்)

Head of Department (Electrical) = துறைத் தலைவர் (மின் இயல்)

Demonstrator = செய்முறை விளக்குநர்

Tutor = உதவி ஆசிரியர்

மீன்துறை

(FISHERIES DEPARTMENT)

Director of Fisheries = மீன்துறை இயக்குநர்

Deputy Director of Fisheries = மீன் துறைத் துணை இயக்குநர்

Assistant Director of Fisheries = மீன் துறை உதவி இயக்குநர்

Assistant Driver = உதவி ஓட்டுநர்

Boat Driver = படகோட்டி

Boat Overseer = படகுப் பணிப் பார்வையாளர்

Chank Fishery Supervisor = சங்குக் குளிப்பு மேற்பார்வையாளர்

Curator, Aquarium = காப்பாட்சியாளர், மீன் காட்சியகம்

Fisheries Engineering Supervisor = மீன்துறைப் பொறியியல் மேற்பார்வையாளர்

Fisheries Refrigeration Engineer = மீன் துறைக் குளிர்ப்பதப் பொறியாளர்

Fisheries Extension Officer = மீன் துறை விரிவாக்க அலுவலர்

Fisherman = மீனவர்

Fishery Overseer = மீன்துறைப் பணிப்பார்வையாளர்

Hatchery Operator = பொரிப்புப் பொறி இயக்குநர்

Iceman-cum-General Workman = குளிர்ப்பதப் பொது வேலையாள்

Inspector of Fisheries = மீன் துறை ஆய்வாளர்

Laboratory Assistant = ஆய்வக உதவியாளர்

Laboratory Attendant = ஆய்வகப் பணியாளர்

Lascar = சிற்றூழியர், கரைக்காவலர்

Manure Operator = எரு தயாரிப்பாளர்

Marine Foreman = கடல்வழி முதலாள்

Mechanical Designer = இயந்திர வடிவமைப்பாளர்

Mechanical Instructor = இயந்திர ஆசிரியர்

Net Maker = வலை பின்னுபவர்

Oilman = மசகிடுபவர்

Operator, Audio-visual Van = இயக்குபவர், ஒளி – ஒலி வண்டி

Public Health Fish Officer = மீன் துறை உடல் நல அலுவலர்

Refrigeration Mechanic = குளிர்ப்பதன இயந்திரப் பழுதுபார்ப்பவர்

Research Assistant = ஆராய்ச்சி உதவியாளர்

Seed Collection Assistant = குஞ்சு சேகரிப்பு உதவியாளர்

Sub-Inspector of Fisheries = மீன்துறைச் சார் ஆய்வாளர்

Taxidermist = போலி உயிரினம் ஆக்குநர்

Tindal = மீகாமன்

Bandsaw Operator, Boat Building Yard = இரம்பம் இயக்குபவர், படகு கட்டு இடம்

Boatswain, M.F.T., Valampuri = படகோட்டி, மீன் துறை நாவாய் வலம்புரி

Boiler Attendant, Fisheries = கொதிகலன் பணியாள், மீன் துறை

Technological Centre = தொழில்நுட்ப நிலையம்

Chargeman, Boat Building Yard = தொழில் மேற்பார்வையாளர், படகு கட்டும் இடம்

Chief Accountant = தலைமைக் கணக்காளர்

Dockhand, M.F.T., Valampuri = படகுத் தளம் பணியாள், மீன் துறை நாவாய், வலம்புரி

Draftsman = வரைவாளர்

Driver, M.F.T. Valampuri = ஓட்டுநர், நாவாய், வலம்புரி

Electrician, Boat Building Yard = மின் வினைஞர், படகு கட்டும் இடம்

Engineer, M.F.T., Valampuri = பொறியாளர், மீன் துறை நாவாய், வலம்புரி

Field Attender = களப் பணியாள்

Fishery Guards = மீன் பண்ணைக் காப்பாளர்கள்

Fitter (Van Section) = பொருத்துநர் (வண்டிப் பிரிவு)

Fitter (Marine Engineering Unit) = பொருத்துநர் (கடல் பிரிவுப் பொறியியல் பகுதி)

Fitter (Survey-cum-Inshore Fishing Centre) = பொருத்துநர் (ஆய்வு – கரையோர மீன் பிடி நிலையம்)

Foreman, Boat Building Yard = இயந்திர முதலாள், படகு கட்டும் இடம்

Head Carpenter = தலைமைத் தச்சர்

Helper (Boat Building Yard) = உதவியாள் (படகு கட்டும் இடம்)

Junior Engineer, Fisheries Training Centre = இளநிலைப் பொறியாளர், (மீன் துறைப் பயிற்சி நிலையம்)

Junior Engineer, Refrigeration = இளநிலைப் பொறியாளர், குளிர்ப்பதம்

Leader Carpenter, Boat Building Yard = முதன்மைத் தச்சர், படகு கட்டும் இடம்

Mechanic, Boat Building Yard = இயந்திரக் கம்மியர், படகு கட்டும் இடம்

Operator, Refrigeration Plant = இயக்குபவர், குளிர்ப்பத இயந்திரம்

Planner, Operator, Boat Building Yard = திட்டமிடுபவர், இயக்குபவர், படகு கட்டும் இடம்

Serang, M.F.T., Valampuri = மரக்கல ஏவலர் தலைவன், மீன்துறை நாவாய், வலம்புரி

Skipper, M.F.T. Valampuri = கப்பல் தலைவன், மீன் துறை நாவாய், வலம்புரி

Senior Mechanic = முதுநிலை இயந்திரப் பழுதுபார்ப்பவர்

Special Officer = தனி அலுவலர்

Sub-Assistant, Inspector of Fisheries = மீன்துறை சார் உதவி ஆய்வாளர்

Superintendent (Survey-cum Inshore Fishing Centre) = கண்காணிப்பாளர் (ஆய்வு- கரையோர மீன்பிடி நிலையம்)

Superintendent (Inshore Fishing Centre) = கண்காணிப்பாளர் (கரையோர மீன்பிடி நிலையம்)

Supervisor (Refrigeration) = மேற்பார்வையாளர் (குளிர்ப்பதம்)

Tindal-cum-driver = மீகாமன் ஓட்டுநர்

Works Manager, Boat Building Yard = பணி மேலாள், படகு கட்டும் இடம்

Workshop Mechanic, Fisheries = பட்டறை கம்மியர், மீன் துறைப் பயிற்சி

Training Centre = நிலையம்

வனத்துறை

(FOREST DEPARTMENT)

Chief Conservator of Forests = வனத்துறைத் தலைவர்

Conservator of Forests = வனப் பாதுகாவலர்

Assistant conservator of Forests = வன உதவிப் பாதுகாவலர்

State Sylvicultural Officer = மாநில வன இயல் அலுவலர்

State Sylviculturist = மாநில வன இயலறிஞர்

Assistant Conservator of = வன உதவிப் பாதுகாவலர்

Forests, Special Mobile Party Unit = இயங்கும் தனிக்குழுப் பிரிவு

Forest Working Plan Officer = வனச் செயல் திட்ட அலுவலர்

Principal, Integrated Forestry School = முதல்வர், ஒருங்கிணைந்த வனக் கலைப் பள்ளி

District Forest Officer = மாவட்ட வன அலுவலர்

Forest Utilisation Officer = வனப் பயன்பாட்டு அலுவலர்

Forest Veterinary Officer = வனக் கால்நடைப் பராமரிப்பு அலுவலர்

Forest Engineer = வனப் பொறியாளர்

Forest Range Officer = வனச் சரக அலுவலர்

Plantation Range Officer = தேர்ட்டச் சரக அலுவலர்

Depot Range Officer = கிடங்குச் சரக அலுவலர்

Research Range Officer = ஆராய்ச்சிச் சரக அலுவலர்

Forester = வனப் பணியாளர்

Research Forester = வன ஆராய்ச்சிப் பணியாளர்

Forest Guard = வனக் காப்பாளர்

Forest Watcher = வனக் காவலாள்

Personal Assistant to the Chief = வனத் துறைத் தலைவரின் நேர்முக

Conservator of Forests = உதவியாளர்

Personal Assistant (Development) to the Chief Conservator of Forests = வனத் துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)

State Wildlife Officer = மாநில வனவிலங்குப் பாதுகாப்பு அலுவலர்

Administrative Assistant to the Chief Conservator of Forests = வனத் துறைத் தலைவரின் ஆட்சி உதவியாளர்

Junior Accounts Officer = இளநிலைக் கணக்கு அனுவலர்

Conservator of Forests = வனப் பாதுகாவலர்

(i) .... Circle = (i) .... வட்டம்

(ii) Working Plan Circle = (ii) செயல் திட்ட வட்டம்

(iii) KundhaSoil Conservation Scheme = (iii) குந்தர் மண்வளப் பாதுகாப்புத் திட்டம்

Deputy Conservator of Forests = துணை வனப் பாதுகாவலர்

Special Mobile Patrol Party = தனிச் சுற்றுக் காவல் குழு

Working Plan Officer = செயல் திட்ட அலுவலர்

Principal, Tamil Nadu Forestry Training School = முதல்வர், தமிழ்நாடு வனக் கலைப் பயிற்சிப் பள்ளி

General Manager, Government Rubber Planations = பொது மேலாளர், அரசு ரப்பர் தோட்டம்

Superintendent, Rubber Plantations = கண்காணிப்பாளர், ரப்பர் தோட்டம்

Farm Forestry Range Officer = பண்ணைக் காடு வளர்ப்புச் சரக அலுவலர்

Conductor = நடத்துநர்

Fieldman = களப்பணியாள்

Tandar = தாணாதார்

Tally Clerk = சரிபார்க்கும் எழுத்தர்

Depot Watcher = கிடங்குக் காவலாள்

கைத்தறித்துறை

(HANDLOOM DEPARTMENT)

Director of Handlooms = கைத்தறி இயக்குநர்

Deputy Director (C.M.) = துணை இயக்குநர் (கூட்டுறவு ஆலைகள்)

Officer On Special Duty = தனிப் பணி அலுவலர்

Assistant Director (Textiles) = உதவி இயக்குநர் (நெசவு)

Deputy Registrar (Handlooms) = உதவிப் பதிவாளர் (கைத்தறி)

Assistant Engineer (Civil) = உதவிப் பதிவாளர் (கட்டடம்)

Textile Control Officer = நெசவுக் கட்டுப்பாட்டு அலுவலர்

Senior Superintendent = முதுநிலைக் கண்காணிப்பாளர்

Co-operative Sub-Registrar = கூட்டுறவுச் சார் பதிவாளர்

Superintendent = கண்காணிப்பாளர்

Co-operative Sub-Registrar (Cell) = கூட்டுறவுச் சார் பதிவாளர் (சேர்மம்)

Junior Engineer = இளநிலைப் பொறியாளர்

Technical Assistant (Textiles) = தொழில்நட்ப உதவியாளர் (நெசவு)

Technical Assistant (Weavers) = தொழில்நுட்ப உதவியாளர் (நெசவாளர்கள்)

Supervisor = மேற்பார்வையாளர்

Senior Inspectors = முதுநிலை ஆய்வாளர்கள்

Assistants Upper Division Clerks = உதவியாளர்கள் / மேல் பிரிவு எழுத்தர்கள்

Junior Inspectors = இளநிலைஆய்வாளர்கள்

Lower Division Clerk/Clerk = கீழ்ப் பிரிவு எழுத்தர் / எழுத்தர்

Textile Inspector = நெசவு ஆய்வாளர்

Stenographers = சுருக்கெழுத்தாளர்கள்

Typists = தட்டச்சர்கள்

Telephone Operator = தொலைபேசி இயக்குபவர்

Tracer = வரைபடம் நகல் எடுப்பவர்

Car Driver = சீருந்து ஓட்டுநர்

Attender = பதிவெழுத்தர்

Last Grade Government Servant = கடைநிலை அரசுப் பணியாளர்

நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை

(HIGHWAYS AND RURAL WORKS DEPARTMENT)

Chief Engineer = தலைமைப் பொறியாளர்

Deputy Chief Engineer = துணைத் தலைமைப் பொறியாளர்

Superintending Engineer = கண்காணிப்புப் பொறியாளர்

Superintending Engineer (Investigation) = கண்காணிப்புப் பொறியாளர் (புலனாய்வு)

Director, Highways Research Station = இயக்குநர், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்

Divisional Engineer, Traffic Engineering Cell = கோட்டப் பொறியாளர், போக்குவரவுப் பொறியில் சேர்மம்

Divisional Engineer (Designs) = கோட்டப் பொறியாளர் (வடிவமைப்பு)

Divisional Engineer (Transport and Machinery) = கோட்டப் பொறியாளர் (போக்குவரத்தும் - இயந்திரங்களும்)

Divisional Engineer (Investigation) = கோட்டப் பொறியாளர் (புலனாய்வு)

Sub-divisional Officer = உட்கோட்ட அலுவலர்

Special Assistant Engineer = தனி உதவிப் பொறியாளர்

Assistant Engineer = உதவிப் பொறியாளர்

Assistant Engineer (Transport arid Machinery) = உதவிப் பொறியாளர் (போக்குவரத்தும் இயந்திரங்களும்)

Assistant Engineer (Stock Verification) = உதவிப் பொறியாளர் (இருப்புச் சரி பார்த்தல்)

Assistant Engineer (Stores) = உதவிப் பொறியாளர் (பண்டங்கள்)
Assistant Engineer (Workshop) = உதவிப் பொறியாளர் (பட்டறை)
Assistant Engineer (Administration) = உதவிப் பொறியாளர் (நிர்வாகம்)

Assistant Engineer (Soils) = உதவிப் பொறியாளர் (மண் ஆராய்ச்சி)

Assistant Engineer (Bitumen) = உதவிப் பொறியாளர் (நிலக்கீல் ஆராய்ச்சி)

Assistant Engineer (Traffic) = உதவிப் பொறியாளர் (போக்குவரத்து)

Assistant Engineer (Planning) = உதவிப் பொறியாளர் (திட்டம்)

Assistant Engineer (Investiation) = உதவிப் பொறியாளர் (புலனாய்வு)

Assistant Engineer (Weak structure) = உதவிப் பொறியாளர் (உறுதியற்ற கட்டுமானம்)

Divisional Engineer (Weak Structure) = கோட்டப் பொறியாளர் (உறுதியற்ற கட்டுமானம்)

Junior Engineer (Weak Structure) = இளநிலைப் பொறியாளர் (உறுதியற்ற கட்டுமானம்)

Section Officer (Steel) = பிரிவு அலுவலர் (எஃகு)

Assistant Engineer (Structure) = உதவிப் பொறியாளர் (கட்டுமானம்)

National Water-supply Assistant Engineer = தேசீயக் குடிநீர்த் திட்ட உதவிப் பொறியாளர்

Local Development Assistant Engineer = உள்ளூர் வளர்ச்சி உதவிப் பொறியாளர்

Panchayat Union Engineer = ஊராட்சி ஒன்றியப் பொறியாளர்

Assistant Engineer, Rural Water Supply = உதவிப் பொறியாளர், ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டம்

Technical Assistant = தொழில் நுட்ப உதவியாளர்

Technical Assistant (Contracts) = தொழில் நுட்ப உதவியாளர் (ஒப்பந்தங்கள்)

Technical Assistant (Roads) = தொழில் நுட்ப உதவியாளர் (சாலைகள்)

Technical Assistant (Planning) = தொழில் நுட்ப உதவியாளர் (திட்டம்)

Technical Assistant (Rural works) = தொழில் நுட்ப உதவியாளர் (ஊரகப் பணிகள்)

Junior Engineer = இளநிலைப் பொறியாளர்

Junior Engineer (Regular) = இளநிலைப் பொறியாளர் (இயற்பணி)

Junior Engineer (Bridges) = இளநிலைப் பொறியாளர் (பாலங்கள்)

Junior Engineer (Culverts) = இளநிலைப் பொறியாளர் (சிறுபாலங்கள்)

Junior Engineer (C.R.F.Works) = இளநிலைப் பொறியாளர் (மைய சாலை நிதிப் பணிகள்)

Junior Engineer (Famine Relif Works) = இளநிலைப் பொறியாளர் (பஞ்சம் தணப்பு பணிகள்)

Junior Engineer (Cyclone Damage Works) = இளநிலைப் பொறியாளர் (புயல் சேதப் பணிகள்)

Junior Engineer (Flood Damage Repir Works) = இளநிலைப் பொறியாளர் (வெள்ளச் சேதப் பணிகள்)

Junior Engineer (Security Measure Works) = இளநிலைப் பொறியாளர் (பாதுகாப்பு ஏற்பாட்டுப் பணிகள்)

Junior Engineer (Seepage Works) = இளநிலைப் பொறியாளர் (நீர்க் கசிவுப் பணிகள்)

Junior Engineer (Soil Stabilisation Works) = இளநிலைப் பொறியாளர் (மண் கெட்டிப் படுத்தும் பணிகள்)

Junior Engineer (Staff Quarters) = இளநிலைப் பொறியாளர் (பணியாளர் குடியிருப்பு இல்லங்கள்)

Junior Engineer (Sugar cane) = இளநிலைப் பொறியாளர் (கரும்பு)

Junior Engineer (Railway Cees Fund Works) = இளநிலைப் பொறியாளர் (இருப்புப் பாதை மேல்வரி நிதிப் பணிகள்)

Junior Engineer (N.H.Works) = இளநிலைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலைப் பணிகள்)

Junior Engineer (P.W.R.D.Works) = இளநிலைப் பொறியாளர் (போர் பிற்காலச் சாலை வளர்ச்சிப் பணிகள்)

Junior Engineer (Plan Works) = இளநிலைப் பொறியாளர் (திட்டப் பணிகள்)

Junior Engineer (Cement Concrete Works) = இளநிலைப் பொறியாளர் (சிமிண்ட் காரைப் பணிகள்)

Junior Engineer (Aspirait Concrete Works) = இளநிலைப் பொறியாளர் (கீழ்காரைப் பணிகள்)

Junior Engineer (E & I Works) = இளநிலைப் பொறியாளர் (மாநிலத் தொடர்பு பொருளாதார முதன்மைப் பணிகள்)

Junior Engineer (Fisheries Development Works) = இளநிலைப் பொறியாளர் (மீன் துறை, வளர்ச்சிப் பணிகள்)

Block Extension Engineer = வட்டார விரிவாக்கப் பொறியாளர்

Supervisor = மேற்பார்வையாளர்

District Panchayat Supervisor = மாவட்ட ஊராட்சி மேற்பார்வையாளர்

Quarry Supervisor = கற்சுரங்க மேற்பார்வையாளர்

Section Officer = பிரிவு அலுவலர்

Section Officer (Purchase) = பிரிவு அலுவலர் (கொள்முதல்)

Section Officer (Transport) = பிரிவு அலுவலர் (போக்குவரத்து)

Section Officer (Repairs) = பிரிவு அலுவலர் (பழுதுபார்த்தல்)

Section Officer (Equipments) = பிரிவு அலுவலர் (தளவாடங்கள்)

Section Officer (Planning) = பிரிவு அலுவலர் (திட்டமிடுதல்)

Section Officer (Workshops) = பிரிவு அலுவலர் (பட்டறை)

Section Officer (Designs) = பிரிவு அலுவலர் (வடிவமைப்பு)

Work Overseer = பணிப் பார்வையாளர்

Panchayat Overseer = ஊராட்சிப் பணிப் பார்வையாளர்

Minor Irrigation Overseer = சிறு பாசனப் பணிப் பார்வையாளர்

Minor Irrigation Sub-Overseer = சிறு பாசனச் சார் பணிப் பார்வையாளர்

Rural Water-supply Overseer = ஊரகக் குடிநீர்த் திட்டப் பணிப் பார்வையாளர்

மத்திய அரசாங்கம்

(CENTRAL GOVERNMENT)

Consulting Engineer (Road Developement) = கலந்தறி பொறியாளர் (சாலை மேம்பாடு)

Additional Consulting Engineer Road Development = கலந்தறி கூட்டுப் பொறியாளர் (சாலை மேம்பாடு)

Divisional Engineer (Consultant) = கோட்டப் பொறியாளர் (கலந்தறிகுநர்)

Deputy Engineer (Consultant) = துணைப் பொறியாளர் (கலந்தறிகுநர்)

Deputy Bridges Officer = துணைஅலுவலர் (பாலங்கள்)

Planning Officer = திட்ட அலுவலர்

Engineer Liaison Officer = பொறியாளர் தொடர்பு அலுவலர்

Secretary, Council of Industrial Research = செயலாளர், தொழில் ஆராய்ச்சி மன்றம்

Director, Central Road Research Institute = இயக்குநர், மையச் சாலை ஆராய்ச்சி நிலையம்

Assistant Engineer (Consultant) = உதவிப் பொறியாளர் (கலந்தறிகுநர்)

தொழில்நுட்பமல்லாதவர்கள்

(NON-TECHNICAL)

Accounts Officer = கணக்கு அலுவலர்

Special Accounts Officer = கணக்குத் தனி அலுவலர்

Accounts Superintendent = கணக்குக் கண்காணிப்பாளர்

Divisional Accountant = கோட்டக் கணக்காளர்

Audit Clerk = தணிக்கை எழுத்தர்

ஆட்சிப் பிரிவு (நிர்வாகப் பிரிவு)

(ADMINISTRATIVE BRANCH)

Administrative Assistant = ஆட்சி உதவியாளர்

Additional Adiministrative Assistant = ஆட்சிக் கூட்டு உதவியாளர்

Confidential Superintendent = மந்தணக் கண்காணிப்பாளர், நம்பகக் கண்காணிப்பாளர்

Confidential Clerk = மந்தண எழுத்தர், நம்பக எழுத்தர்

Miscellaneous Clerk = பலவகை வேலை எழுத்தர்

Avenue Clerk = நிழற்சாலை எழுத்தர்

Routine Clerk = வாலாய எழுத்தர்

Budget Clerk = வரவு செலவுத் திட்ட எழுத்தர்

Correspondence Clerk = கடிதப் போக்குவரத்து எழுத்தர்

Camp Clerk = தங்கல் எழுத்தர்

Establishment Clerk = பணியானரமைப்பு எழுத்தர்

Tools and Plant Clerk = கருவிகள், தளவாடங்கள் எழுத்தர்

Pension Clerk = ஓய்வு ஊதிய எழுத்தர், கொடுவை எழுத்தர்

Pay Bill Clerk = சம்பளப் பட்டி எழுத்தர்

Inspection Clerk = ஆய்வு எழுத்தர்

Tender Clerk = நிலுவை ஒழிப்பு எழுத்தர்

Deposit Clerk = உரிமைக் கோரிக்கை எழுத்தர்

Arrear Clearance Clerk = தணிக்கைத் தடை எழுத்தர்

Claims Clerk = பயணப் படிப் பட்டி எழுத்தர்

Audit Objections Clerk = தணிக்கைத் தடை எழுத்தர்

T.A. Bill Clerk = படிப் பட்டி எழுத்தர்

Conference Clerk = மாநாடு எழுத்தர்

Office Establishment Clerk = அலுவலகப் பணியாளரமைப்பு எழுத்தர்

Executive Establishment Clerk = செயல் பணியாளரமைப்பு எழுத்தர்

Ministerial Establishment Clerk = அலுவலகப் பணியாளரமைப்பு எழுத்தர்

Pay and Allowance Clerk = சம்பளப் படி எழுத்தர்

Roneo Operator = படி பெருக்கி இயக்குபவர்

Water Boy = நீர் வழங்கி

Contingent Establishment = சில்லறை நிதிப் பணியாளர்

வேலை நிதி ஊதியம் பெறுவோர்

(WORK CHARGED ESTABLISHMENT)

Air Compressor Driver = காற்றமுக்கி ஓட்டுநர்

Apprentice = வேலை பழகுநர்

Assistant Storekeeper = உதவிப் பண்டகக் காப்பாளர்

Avenue Mazloor = நிழற்சாலை வேலையாள்

Backsmith = கருமான், கொல்லர்

Boring Mechanic = துளையிடும் இயந்திரக்கம்மியர்

Bull Dozer Driver = பரம்பு ஓட்டுநர்

Carpenter Maistry = தச்சு மேலாள்

Chainman = சங்கிலியாள்

Cleaner = சீராள்

Crane Operator = பாரந்தூக்கி இயக்குபவர்

Driller = துறப்பணம் இடுப்பவர்

